19th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: தஞ்சை ஜில்லாவில் மற்ற வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் இதே போன்ற பணிகள் செய்தார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் எனக்கு இல்லை.

கிராம உத்தியோகஸ்தர்கள் (பயணப்படி).

* 233 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து வரி வசூல் சம்பந்தமாக அடிக்கடி கூட்டப்படும் கூட்டங்களுக்குப் போய்வர கிராம அதிகாரிகளுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா?

(இ) அப்படியானால், எவ்வளவு?

(உ) பஞ்சாயத்து வரியை வசூலிக்க கிராமத் தலைவர்களிடம் ஒப்படைத்த பிறகுதான் படி கொடுக்கப்படுகிறதா?

(எ) முன்பிருந்தே கொடுக்கப்படுகிறதென்றால் இப்போது அவர்களுக்கு அதிகமான வேலையும் அடிக்கடி ரெவின்யூ அதிகாரிகள் கூட்டுகின்ற கூட்டங்களுக்குப் போய்விடுவதால் அதற்கு அதிகப்படியாக பிரயாணப்படியும் இனிமேலாவது கொடுக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்து வரும் கிராம அதிகாரிகளுக்கு பஸ் அல்லது ரயில் கட்டணமும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வெளியே இருந்தால், தினசரிப் படி ரூ. 1-25 ந.பை. விதம் கொடுக்கப்படுகிறது.

(உ) ஆம்.

(எ) எழவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராம முன்சீப்கள் தாங்களே நேரில் போகாமல் சிப்பந்திகளின் மூலம் வரிவசூலான தொகையை அனுப்பினால், அந்தத் தொகையை வாங்கிக்கொள்ள மறுப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் இல்லை.

Allotment of funds to panchayats.

* 234 Q.—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) on what basis funds are allotted to panchayats through panchayat unions; and

(b) whether population is one of the factors taken into account?

THE HON. SRI S. M. A. MAJID: (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

---

a Printed as Appendix I on page 306–308.

திரு. வி. எஸ். எஸ். மணி: பஞ்சாயத்து யூனியன் நிதிகளை கிராம பஞ்சாயத்துக்கள் அனுபவிக்கக்கூடிய அளவில் டவுன் பஞ்சாயத்துக்கள் அனுகூலம் அடைவதில்லை. எனவே டவுன் பஞ்சாயத்துக்கள் தனியாக இயங்கும்படி நிதிகளை அலாட்மெண்டு செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: லோகல் செஸ்ஸிலேகூட 9-ல் 2 பங்கு டவுன் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தது போக, பஞ்சாயத்து யூனியன் எலிமெண்டரி எஜுகேஷன் பண்டுக்கு 9-ல் 4 பங்கு கொடுத்துவிட்டு, மீதித் தொகையை வில்லேஜ் வாரியாகக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

Road (Pudur-Nallur).

* 255 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to form a road from Pudur to Nallur, via A. Mallapuram and Sukkampatty in Dharmapuri taluk, Salem district?

The Hon. Sri S. M. A. MAJID: Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்த வேலை எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த வேலை மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மாரந்தஹள்ளி டவுன் பஞ்சாயத்தின் கீழ் ஒரு மைல் 5 பர்லாங்கு. கிட்டத்தட்ட 1964-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியில் முடிவு பெறலாம். அம்மணிமல்லபுரம் பஞ்சாயத்துக்குக் கீழே 2 மைல் 1 பர்லாங் ரோடுக்கு ரூ. 9,300-க்கு எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. அது சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 1,688 எற்கனவே செலவாகி விட்டது. சீக்கிரம் அந்த வேலை முடியும். பேவமர்ணஹல்லி பஞ்சாயத்தின் கீழ் 2 மைல் 5 பர்லாங் ரோடுக்கு இதுவரைக்கும் எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்படவில்லை. கிராமத் தொண்டர் படையினரை உபயோகித்து, அந்த வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று அந்தப் பஞ்சாயத்து கருதுவதாகத் தெரிகிறது.

தஞ்சை மாவட்டக் காடுகள்.

* 264 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள காட்டிலாக்காவின் காடுகளிலிருந்து அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?